padippakam

# விடிவு

இதழ் : 7

1989

அன்பளிப்பு ரூபா 6.00



தேச அன்னையே!
நீ
இன்று தாங்கும்
சுமையைவிட
உன் வருங்காலத்தூண்கள்
நாளை சுமக்கும்
வெளிநாட்டுக்கடன்
அதிகம் கனக்கும்

அப்போது
இன்றைய சுமை
உனக்கிருக்காது.
நாளைய நாளைகளில்
உன் மடிமீது தவழ
ஜனத்தொகை
அதிகம் இருக்காது
ஆனல் கடன் பளுவோ...

கலாநெஞ்சன் சாஜஹான்

ஒரு 'மக்கள் கலை இலக்கிய பேரவை' வெளியீடு

படிப்பகம்

padippakam


*Visit to*

# SHINAZ TRADER'S

*Dealers in Electrical Goods and Fancy Goods*

128 1/1, (13 N) First Floor,
Keyzer Street,
Colombo-11.

Tel ; 545070

*Visit to*

# JUBILEE TRADER

*Wholesale & Retail Dealers in Textiles*
*Specialist in Sarees*

161 A, Second Cross Street,
Colombo-11.

Phone : 421554


படிப்பகம்

padippakam

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

# ஆசிரியர் பீடம்

இலங்கையில் இன்றைய அரசியல் சூழல் திருப்திகரமற்ற யதார்த்தத்தை உள்வாங்கி பீடுநடை போட்டு நடப்பதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இத்தகைய சோகமான நிகழ்வுகளுக்குப் பின்னணியில் வறுமையும், கற்ற இளைஞர்களின் வேலை, உயர் கல்வி வாய்ப்பின்மையும் நிமிர்ந்து நிற்பதனை நிதான சிந்தனை உடையோரால் அனுமானித்துக் கொள்ளமுடியும்.

முதலாளித்துவ பொருளாதார முறை மிக விசித்திரமானது. வறுமை ஒழிப்புக்கு விளக்கம் கூறவும் அது முன்வருகிறது. இது வேடிக்கையானதே. முதலாளித்துவ அரசியலாளர் தமது நலனை பாதுகாக்க இத்தகைய வாக்குறுதிகளை வழங்குவதும் பின்னர் அதை பின் போடுவது ஒன்றும் புதிதல்லவே. வறுமை ஒழிப்புத் திட்டம் பாராட்டத்தக்க திட்டம் என்பதனை நாம் நன்கு அறிவோம். இருப்பினும் வருமான ஏற்றத்தாழ்வுக்கு தனிச் சொத்துடைமையும் கொண்ட இன்றைய அமைப்பில் இது சாத்தியபூர்வமான யோசனை என்பது கேலிக்குரியதே. மூலவளங்கள் மக்களிடையே சமமாகப் பகிரப்படும் அமைப்பே வறுமை பிரச்சினைக்கு தீர்வாகும்.

கற்றோர் வேலைவாய்ப்பின்மை எமது முக்கிய அடுத்த பிரச்சினை. இலவசக் கல்வியின் பிரசாரம் கற்போர் தொகை அதிகரிக்க இத் தொகைக்கேற்ப வேலை வழங்கல் காணப்பட்டாலும் பொருளாதார முறையின் விளைவாக கல்வி கற்று வேலைவாய்ப்பு பெறமுடியாத நிலைமை தோன்றுகிறது. இதன் மூலம் ஆயுதப் போராட்டம் எழுகிறது. நிரந்தரத் தீர்வு தேடவேண்டுமானுல் சந்தேகமின்றி சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிப்பதே ஒரே வழியாகும்.

எல்லாரும் எல்லாம் பெறும் ஒரு உயரிய சமூக அமைப்பின் மூலம் இலங்கையில் இருந்து அந்நிய ஆதிக்கத்தை முழுமையாக ஒழிக்கலாம் என்பதிலும் நாம் தெளிவாக உள்ளோம்.

எங்கள் எழுதுகோல்கள் ஏழைகளின் எழுச்சிகளை ஏந்திவரட்டும்.



படிப்பகம்

padippakam

# தேசிய இனப்பிரச்சனையும் சில முடிவுகளும்....

செல்வி மா. நடராஜா யாழ்ப்பாணம்

தேசிய இனப்பிரச்சனை என்றால் என்ன?

தேசியம் + இனம் + பிரச்சனை = தேசிய இனப்பிரச்சனை

தேசிய இனம் + பிரச்சனை = தேசிய இனப்பிரச்சனை

தேசியம் என்றால் என்ன? தேசம்⟶தேசியம் = தேசிய உணர்வு

தேசிய உணர்வு = தேச உணர்வு = நாட்டுப்பற்று

தேசம் = சுதேசிகள் [உள்நாட்டவர்] + விதேசிகள் [அன்னிய நாட்டவர்]

தேச மக்கள் = நாட்டுக்குரிய மக்கள் = சுதேசிகள்

தேசத்தில் வாழும் மக்கள் = சுதேசிகள் + விதேசிகள்

இனம் என்றால் என்ன? என்ன அடிப்படையில் அழைக்கின்றோம்?

இங்கு மொழி அடிப்படையிலான மக்கள் கூட்டம் ஓர் இனம் என அழைக்கப்படுகின்றார்கள். உ+ம்: தமிழர், சிங்களவர், மலையாளிகள், ஆங்கிலேயர்.

அப்படியானால்,

இது இனங்களின் தேச உணர்வின் அடிப்படையிலான பிரச்சனையா; எல்லா இனங்களும் தேச உணர்வுடன் செயற்பட்டால் இனங்களுள் பிரச்சனை இருக்க முடியாதே. அன்னிய சக்திகளுடன் தானே இருக்க முடியும்.

அப்படியானால்,

தேசிய இனங்களிற்கிடையேயான பிரச்சனையா?

தேசிய இனம் என்றால் என்ன? ஒரு மக்கள் கூட்டம் தமக்கென தனித்துவமான மொழி, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரிய பிரதேசம், பொருளாதாரம் ஆகியவற்றைக் கொண்டுள்ள போது ஒரு தேசிய இனமாகக் கணிக்கப்படுகின்றார்கள். ஒரு தேசிய இனத்தின் தனித்துவப்பண்பு அல்லது உரிமை அதன் சுயநிர்ணய உரிமையாகும்.

சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?

ஓர் இனம் தன்னைத்தானே ஆளும் அதிகாரம் கொண்டிருத்தல். அதாவது தன் தலைவிதியைத் தானே தீர்மானிக்கும் உரிமையுக்



படிப்பகம்

padippakam

கொண்டிருத்தல். ஓர் இனம் தேசிய இனம் என ஏற்றுக் கொள்ளப்படும் போது அதற்குரிய சுயநிர்ணய உரிமையானது இயல்பாகவே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இரு தேசிய இனங்களிற்கிடையிலான பிரச்சனை ஏன் எழுகின்றது?

ஒரு நாட்டில் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கலாம். அங்கு இனம் என்ற உணர்வை பின்தள்ளி தேசம் என்ற உணர்வோடு நாட்டின் அனைத்து மக்களும் சமம். அனைவரும் சகல உரிமைகளும் அனுபவிக்க வேண்டும் என்ற புரிந்துணர்வுடன், இனங்களுக்கிடையில் பரஸ்பர இணக்கமான தன்மை காணப்படும் போது அங்கு தேசிய உணர்வு முதன்மைப்படுத்தப்படுகின்றது. அங்கு தேசம் முன்னேற்றப் பாதையில் செல்கின்றது.

ஆனால் தேசிய உணர்வை மொழி உணர்வு மேவும் போது இனங்களுக்கிடையில் மனவேற்றுமை பிரச்சனைகள் உருவாகின்றது.

சில அடிப்படை மனிதப்பண்புகளுடன் இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கலாம். சாதாரணமாக எந்தத் தனிமனிதன் கூட தான் சுதந்திரமுள்ளவனாக, மற்றவர்களால் அடக்கியாளப்படாதவனாக, தன் உரிமைகள், தன்மானம், சுய கௌரவம் பாதிக்கப்படாதவனாக, தன் தனித்துவத்திற்கு பங்கம் ஏற்படாத வகையில் வாழவேண்டுமென்றே விரும்புகின்றான். அது அடிப்படை உரிமை. எனின் பெரிய மக்கள் கூட்டத்தை உள்ளடக்கிய ஓர் இனம் தன் தனித்துவம் பறிக்கப்பட்டு அடிமையாக்கப்படுவதை மற்றவர்களால் அடக்கியாளப்படுவதை, தன் சுதந்திரம் உரிமைகள் பறிக்கப்படுவதை தான் சுரண்டப்படுவதை ஏற்றுக் கொண்டு இருக்குமா?

இங்கு இன உணர்வு தேசிய உணர்வை வர்க்க உணர்வை விழுங்குவதால் தேசிய இனப்பிரச்சனை உருவாகின்றது. அதிலும் தாம் தான் அந்நாட்டிற்குரியவர்கள், தம்மொழி, தம் மதம் தான் அந்நாட்டிற்குரியது என்ற பேரினவாத உணர்வு உருவாகும் போது அங்கு இனங்களுக்கிடையில் பிளவைத்தவிர வேறுவழியில்லாத நிலை உருவாகின்றது.

ஒரு தேசம் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் அங்கு தேசிய உணர்வு முதன்மைப்படுத்தப்பட்டு, வாழும் இனங்களிடையே ஒற்றுமை, சமாதானம், நல்லுறவு நிலை, பரஸ்பரம் புரிந்துணர்வுத் தன்மை என்பன பேணப்பட வேண்டும். இனங்களின் அடிப்படை மனித உரிமைகள், சுதந்திரம் அவர்கள் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். அந்நிலையில்தான் அவர்கள் தன் இனம் மொழி என்ற வேறுபாடுகளை மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக வர்க்க அடிப்படையில் ஒன்றிணைந்து பாட்டாளி வர்க்கத்தை முதன்மைப்படுத்தும் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.



படிப்பகம்

padippakam

ஆனால் பேரினவாத உணர்வே முதன்மை பெற்றிருக்கும் நேரத்தில் தேசிய உணர்வு மழுங்கடிக்கப்படுகின்றது. நாடளாவிய வர்க்கப் போராட்டம் திசை திருப்பப்படுகின்றது. அடக்கப்படும் இனத்திற்கு தன் சுதந்திரத்தை, தன் உரிமைகளை, தன் தனித்துவத்தை, தன் இனத்தைக் காக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்படுகின்றது. ஒரு நாடு, ஒரு கொடியின் கீழ் தன் உரிமைகளைப் பெறப் போராடும். அடக்கப்படும் இனம் இறுதியில் இயலாத கட்டத்தில் தன் தலை விதியை தானே தீர்மானித்து பிரிந்து செல்ல முயற்சிக்கிறது. தனது தலைவிதியை தானே தீர்மானிக்கும் உரிமை அதற்குண்டு. அதற்கான சட்டம் ஐ. நாடுகள் சாசனத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு இலங்கையை எடுத்துக்கொண்டால் தரகு முதலாளித்துவ தலைமைகளாலும் - அதாவது நாட்டின் தன்னிறைவில் அக்கறையற்ற தம் நாட்டின் இறைமையை அன்னியருக்கு அடிமையாக்கும் தன்மையுடைய, பதவி ஆசைகொண்ட சுயநலம் பிடித்த இனவெறி கொண்ட அரசியல்வாதிகளாலும் பேரினவாதம் தூபம் போட்டு வளர்க்கப்பட்டுள்ளது. அவர்களின் திட்டமிட்ட இச் செயற்பாடுகளினால் வர்க்கப் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டு இனவெறி மூட்டப்பட்டது. இத்தகைய இழிநிலை இந்நாட்டிற்குத் தோன்றியதே இன்று நாடு இந்நிலைக்கு சீரழியக்காரணம்.

தமிழர்கள் தம் உரிமைக்காக அகிம்சா ரீதியில் போராடி அது ஆயுதத்தால் கொடூரமாக அடக்கப்பட்டதால், இறுதியில் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்கள்.

அடிப்படை உரிமைகளுக்காக, சுதந்திரத்திற்காகப் போராடும் எமது தமிழினம் அதேவேளை மிக முக்கியமான அம்சமொன்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். பல்வேறு சமூகங்களால் ஆக்கப்பட்ட எமது தமிழினம் அதன் சகல சமூகங்களினதும் அடிப்படை உரிமைகள், சுதந்திரம் என்பன பேணத்தக்க வகையிலேயே அதன் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

இங்கு ஒன்றைத் தீர்மானமாக உணரவேண்டியுள்ளது. வர்க்கப் போராட்டமானது முன்னெடுக்கப்படுவதற்கு முன்பு இனங்களுக்கிடையில் உண்மையான புரிந்துணர்வும் ஏனைய இனங்களின் அடிப்படை உரிமைகளை மதிக்கும் தன்மையும் உருவாகாவிடின் நாட்டின் எவ்வித முன்னேற்றத்தையுமே எதிர்பார்க்க முடியாது. ஒரு சோஷலிச சமுதாயம் அமைப்பதன் மூலம்தான் தேசத்தை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும்.

தமிழ் மக்களுக்கு மாத்திரமின்றி ஏனைய இனங்களுக்கும் பிரச்சனைகள் உள்ளன. இவை இந்த வர்க்கப் பேத அமைப்பால் தோற்றம் பெற்றதே வர்க்கப் பேதமற்ற சோஷலிச அரசே சகல பிரச்சனைகளுக்கும் ஒரு தீர்வாகும்.



படிப்பகம்

padippakam

# இருப்பின் படிமம் கவிதை

நவாஸ் ஏ. ஹமீட் (ஈழக்கவி) வெலிமடை

இருப்பிலிருந்து இருப்பை வெளிக்கொணர்வது தான் கவிதை, வெறும் வாய்ப்பாடுகள் கவிதையாவதில்லை. வாழ்க்கையின் படிமங்களே கவிதையாக மினுக்கமுறுகின்றன. ''மனித வாழ்க்கையின் ரசிப்பீடமாய் முன்னிளும் கலைநிழல் உள்ளமிழ்த்து வாழ்க்கையிலேயே பெய்யப்படுகிறது. இப்போ — மனித இருப்பே கலை'' (அலை - 2) என்கிருர் மு. பொ. அவர்கள். எஸ். ஆர். சீனிவாசராகவனும் ''வாழ்க்கையே குறிக்கோளுள்ள பெரும் கலை'' என்கிருர். எனவே, கலையும் வாழ்க்கையும் இரண்டு துருவங்கள் அல்ல; இரண்டும் ஒன்றே.

வாழ்க்கையை பிரத்தியட்சமாக பிரகடனப்படுத்தும் ஒரு சிறந்த கலை ஊடகம் கவிதை. இதனை ஆய்வுபூர்வமாக எடுத்துக் காட்டுகிருர் — பீனிக்ஷ்.

'கவிதை வாழ்க்கை அனுபவங்களிலிருந்து பிறக்கிறது. கவிஞன் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து தன் கவிதையை பிரசவிக்கிருன். சமுதாயம் மாறிக்கொண்டேயிருக்கிறது. இப்படி ஏற்படுகின்ற மாறுதல்கள் சமூகத்தில் ஒரு அங்கமான கவிஞனையும் பாதிக்கிறது. கவிஞன் மாறுகின்ருன். கவிஞனது சிந்தனை மாறுகிறது. கவிதையும் மாறுகிறது. இது கவிஞனுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள பொதுவான தொடர்பு.'

''வாழ்க்கையும் காவிரி / அதிலெங்கும் கிளிக்கூண்டு / வார்த்தையே மணல்/ஓசையே ஜலம்/என் தீராத வேட்கையே / குவிக்கும் விரல்கள்/பாட்டென்னும் கூண்டொன்று அமைத்தேன்;/ அழகென்னும் கிளியை அழைத்தேன்/ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்/ அழகினை அழைப்பேன் நான் என் நாளும்.''

இது புதுக்கவிதையின் பிதாமகர் ந. பிச்சமூர்த்தி அவர்களின் கவிதை.

''எதிர் எதிராக அமர்ந்து கொள்கிருேம்/யன்னல்கள் எல்லாம் சிறகுகளாக/விரைகிறது ரயில்/சிதறிப்/பறந்தன வண்ணத்துப் பூச்சிகள்/விட்டு விட்டுத்/தொடர்கிறது வயல் வெளி/இன்னும்/



படிப்பகம்

padippakam

கடலும் அழகு/மலையும் அழகு/நதியும் கூட அழகுதான்/எல்லாம்/ எங்கள் இருப்பில் அர்த்தம்/கொள்ளும்.'' (புதுக - 3)

இது – ஈழக் கவிஞர் சேரனின் (கவியரசன்) கவிதை.

இக் கவிதைகள் இரண்டும் இருப்பின் இனிமையை இயற்கையின் இணைப்பில் ஆழமான அங்கதப் பார்வையோடு வெளிப்படுத்து கின்றன.

அர்த்தமற்ற வாழ்க்கைச் சக்கரத்தில் சுழலும் மக்களைப் பார்த்து இவ்வாறு பாடுகிறார் லெபனான் கவிஞர் கலீல் ஜிப்ரான்.

''என் நாட்டு மக்களே!/இந்த கவிஞனிடம்/என்ன எதிர்பார்க் கிறீர்கள்?/அது இருக்கட்டும்/வாழ்க்கையிடம் தான்/என்ன எதிர் பார்க்கிறீர்கள்?/வாழ்க்கையின் புதல்வர்களாக/உங்களை ஒப்புக் கொள்ள முடியவில்லை/ஜோசியர்களின் சூனியக்காரர்களின்/பொய் களைப் பகுதிப் பகுதி/உங்களை வாழ்க்கை உயிர் வாழ்கிறது!/ அடுத்தவனை உறிஞ்சுவதே!/உங்கள் மதமாகிப் போனதே/ இரட்டை வேடமிடுவதே/உங்கள் வாழ்க்கையாகிப் போனதே/ இன்னுமா உயிர் வாழ்கிறீர்கள்?''

(தமிழில் — வைரமுத்து)

பிரச்சினைக்குரிய வாழ்வை பிரக்ஞைபூர்வமாக ஏற்று வாழ்க் கையை ஜெயிக்க வேண்டும். இருப்பிடம் தோற்றுப் போகக்கூடாது. சாவுக்கும் அஞ்சாமல் சுறுசுறுப்புடன் வாழவேண்டும் என்கிறார் எங்கள் மூத்த கவிஞர் மஹாகவி (து. உருத்திரமூர்த்தி)

''இம் மாநிலத்தே இறவாது/பல்லாண்டு/சும்மா கிடந்து சுக மாய்/இருப்பதிலும்/கொண்டு வா பார்ப்போம் கொலை எருமை/ பூட்டிய நின் வண்டியினை எனது வாசலுக்கு!/நான் இங்கே/சூழ் வேன்; சுழல்வேன்; சுமப்பேன்/சுவைத்திருப்பேன்/வாழ்வேன் மடியும் வரை.''

பலஸ்தீன கவிஞர்கள் தங்கள் போராட்ட வாழ்வினை அப்படியே கலைத்துவத்துடன் படம் பிடித்துக் காட்டுகிறார்கள். எடுத்துக்காட்டாக பலஸ்தீன கவிஞர் மஹ்மூட் தர்விஷ் அவர்களின் கவிதை ஒன்றை பார்ப்போம்.

''அவனது வாயில் அவர்கள் சங்கிலிகளைப் பிணைத்தனர்/ மரணப் பாறையுடன் இறுகக் கட்டினர்/பின்னர் கூறினர்/நீ ஒரு கொலைகாரன் என்று/அவன் எல்லாத் துறைமுகங்களில் இருந்தும்/ துரத்தியடிக்கப்பட்டான்/அவனது அன்புக்குரிய காதலியை/ அவர்கள் கவர்ந்து விட்டனர்/பின்னர் கூறினர்/நீ ஒரு அகதி



படிப்பகம்

padippakam

என்று.../காய்ந்து போன ஒரு கோதுமைக் கதிரின் விதைகள்/ கோடிக்கணக்கான பசிய கதிர்களால்/சமவெளியை நிரப்பும் ''

(தமிழில் — நுஃமான்)

ஒரு 'இலேக்கறிக்காரி'யின் வாழ்வினை இவ்வாறு எடுத்துச் சொல்கிறார் கவிஞர் எம். ஏ. நுஃமான்.

''உச்சிவெயில்ல/வயல்ல சுழியோடிப் / பிச்சிவந்து விக்கும்/ புழைப்புள்ள / என் புழைப்பு/நாளும் முழுப் பொழுதும்/நாயா அலேஞ்சு/சதிரத்தைச் சாறுப் புழிந்து / கிடைக்கிறது/என்னத்துக் காகும்/இரண்டு குமர் கிடக்கு...''

சோக மேகங்களால் சூழப்பட்ட மலையக மக்களின் வாழ்வினை கவிஞர் சி. வி. வேலுப்பிள்ளை இவ்வாறு பாடுகிறார்.

''ஆழப்புதைந்த"/ தேயிலைச்செடியின் / அடியிற் புதைந்த / அப்பனின் சிதைமேல்/ஏழை மகனும் / ஏறிமிதித்து / இங்கெவர் வாழவோ / தன்னுயிர் தருவன்.

(தமிழில் — சக்தி அ. பாலையா)

ஆக, வாழ்க்கையிலிருந்துதான் கவிதைகள் பிறக்கவேண்டும். நிஜக் கவிதைகள் அப்படித்தான் பிறக்கின்றன. வெறும் புனைவியல் பாங்கான அலங்கார கவிதைகள் (?) காலப் பரிணாமத்தில் காணாமல் போவது திண்ணம். நிஜவாழ்வை சொல்லும் கவிதைகள் தான் காலத்தை வென்று வாழும் திராணியுள்ளது.

மேல் காட்டப்பட்ட கவிதைகள் அனைத்தும் வாழ்க்கையின் நீட்சியாகவே அமைந்துள்ளமை ஆழ்ந்து நோக்கத்தக்கது.

''நான் கவிதை எழுதியதன் நோக்கம் நீ சொல்வது போல அல்ல. என் கவிதையில் கவிதை இருக்கிறது. அதைச் சொல்லத் தான் கவிதை எழுதி இருக்கிறேன்'' என்கிறார் தமிழகத்தின் மிகச் சிறந்த கவிஞர் ஞானக்கூத்தன் சொல்வது போல், கவிதையில் கவிதை இருக்க வேண்டுமானால் அதில் யதார்த்த இருப்பு இருக்கவேண்டும்.

சுந்தர ராமசாமி அவர்களின் எழுத்துக்கள் யதார்த்த இருப்பின் படிமங்களாக இருப்பது போல, ஈழகவிஞர்களின் (நுஃமான், சசி, மு. பொ. யோகராசா, சு. வி. ஜெயபாலன், சேரன்) கவிதைகளும் யதார்த்த இருப்பின் படிமங்களே.



படிப்பகம்

padippakam

ஆனால், இன்றைய ஈழத்து இளம் கவிஞர்களிடம் இத்தகைய ஆளுமை முனைப்பாய்த் தெரியவில்லை. வாசுதேவன், மு.இ.அ.ஜப்பார், சோலைக்கிளி, எஸ்.கருணாகரன் போன்ற ஒரு சில இளம் கவிஞர்களிடம் மட்டுமே 'கவித்துவம்' வீச்சாய் தெரிகிறது. நிதானிதாசன் 'விடிவி'ல் எழுதிய 'கேம்பிலிருந்து ஒரு கடிதம்' என்ற கவிதை குறித்துக்காட்ட வேண்டிய ஒரு கவிதை.

இன்று நூற்றுக்கணக்கானோர் கவிதை எழுதுகின்றார்கள். அவை வாழ்க்கையின் அலசலில் எழுதப்படும் நிஜக் கவிதைகள் அல்ல. மேலும், அவற்றில் 'கவித்துவம்' இல்லாமல் வெறும் அலங்காரமும், சொற்களும் மட்டுமே இருப்பதால் அவை கவிதைகளே அல்ல என்று கூட சொல்லலாம்.

''கவிதை எழுதுவதற்காக எங்கேயும் அலைந்து கொண்டிருக்காதீர்கள். கவிதை எழுத வேண்டுமே என்பதற்காக எழுதாதீர்கள் நாம் எங்கே அலைந்தாலும் சுற்றி சுற்றி உழன்று கொண்டிருப்பது இந்த வாழ்க்கை மேம்பாட்டுக்காகத்தான் ஆகவே வாழ்க்கையோடு செல்லுங்கள். வாழ்க்கையை உன்னிப்போடு நோக்குங்கள். அதன் மேம்பாட்டுக்காக உழைக்கும் சக்திகள் நடத்தும் போராட்டத்தின் பக்கம் நில்லுங்கள். அவர்களோடு கலந்து அவர்களின் ஒருவராக நீங்களும் மாறுங்கள் உங்களைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கும் 'தயாரிப்பு வார்த்தைகள்' உங்களை விட்டு விலகிப் போகும். புதிய மக்கள் வார்த்தைகள் உங்களுக்குக் கிடைக்கும். ஜீவனுள்ள வாழ்வின் உண்மையும் உங்களுக்குப் புரியும். புதிய மக்கள் கவிதைகளும் உங்களிடமிருந்து பிறக்கும்'' — பீனிக்ஷ்

''ஆக.
கவிதையின்
ஆப்தவாக்கியம் —
வாழ்க்கை!''

## சமதர்மக் கோட்பாடு

தனிச் சொத்தையும், சுரண்டும் ஆளும் வர்க்கத்தையும் ஒழித்து செல்வத்தைச் சமமாகப் பங்கீடு செய்வதற்கான போராட்டத்தை முன்வைக்கும் பொருளாதார, சமூக, அரசியற் கோட்பாடு. உற்பத்திச் சாதனங்கள், பரிமாற்றம், விநியோகம் ஆகியவற்றைச் சமூக உடைமையாக்குவதன் மூலமே நடைமுறையில் மேற்கூறியவாறு செல்வத்தைப் பங்கீடு செய்ய முடியும்.



படிப்பகம்

padippakam

# புதிய கவிதைகள்

★ தயாரிப்பு : அபீதா

## சாகுமுன்

நான் சாகுமுன்
நிதி யொன்றைத்
திரட்டுங்கள்;,
சிலையொன்றை
நடுவுங்கள்.
செத்தபின் யார் கண்டார்
என்பெயரைச் சொல்லி
எத்தனையோ நிதிகள் திரளும்
கணக்குகளைக் கேட்டு,
குத்து வெட்டுக்கள் நடக்கும்
என் ஆத்மா
ஏங்கி அலையும்
ஏனிந்த அல்லோலம்
உயிரோடிருக்கும் போதே
சிலையை நடுவுங்கள்.
சிரமம் குறையும்,
சிலையும் என்னைப்போல்
அமையுமல்லவா?

— சாரணாகையூம் —
பதுளை.

## எழுந்துசெல்

எழுந்து செல்.
எங்களில் உள்ள
அநியாயங்களை
அடித்தெறி!
பெண் அடிமையும்,
மண் அடிமையும்,
ஒரு காலத்தின் தற்காலிகமே!

— ஹம்சுல் இனுயாசமத் —
பிலிமதலாவ.

## ஒரு கவிதை

தூக்கத்தில் இருந்தே
இடப்பக்கமாக ஓடத்தொடங்கியது
என் வீட்டு மணிக்கூடு விழித்து—
பேந்தப்பேந்த விழித்தேன்
கிட்டிப்புள்ளையும் பறித்துக்
குழியையும் மூடி விடப்
பேந்தப் பேந்த விழித்தேன்.
நகர் தலில்
நகர்ந்த சூரியனும்
கழன்று விழுந்து
நீரூற்றுகள் வற்றிப் போகக்
கரகோஷ மெழுப்பின
கழுகுகளும் மிஸக்கரடிகளும்.
வெளிச்சம்வர இமைதிறக்கும்மரை
இறந்து போய்க் கிடக்கிறேன்
என் இரத்தத்தை
நானே முத்தமிட்டபடி!

—மு. இ. அ. ஜப்பார் கல்முனை—



படிப்பகம்

padippakam

## கொடுமையே!

தேசத்தை
வசந்தமாக்குபவன்
நாய் போல்
வாழ வேண்டுமா?
இந்த
மண்ணை வசந்த மாக்குபவன்
மடிந்து சாகணுமா?
உழைப்பாளியே
உறுதி பெறு!
உழைப்பவர்க்கே — இனி
உலகம்'

—பாஹிமா ஜஹான் சவாஹீர்—
குருநாகல்.

## இறுதிமுடிவு

பெண்ணே-
வடக்கும், தெற்குமாப் போல
பிரிந்திருந்தும்
நம் காதலுக்கு
விடிவு எப்போது?
இனவாதம்
காதல் இதயங்களிலும்
பிரிவினையை சொல்கிறதே!
நமது
காதலின் முடிவு
இனி ஒரு விடிவிலே
உண்டென்போம்!

—சேக்நிஸார்—
அம்பாந்தோட்டை

## முறையா?

மனிதர்களே-
ஏன் இங்கே
ஏழை மக்கள்
சோகங்களுடன்
சேர்ந்துள்ளனர்?
வாழ்க்கையின்
துன்பத்திற்கு
யார் பொறுப்பு?
நமது எதிர்காலம்
இந்த இருட்டில்
இனியும் தொடருமா?

—சபீனஸ் 'ரீ' தாஸிம்—
புத்தளம்.

## சித்தார்த்தன் நித்திரை

பலியிடுவது பாவம்
என்றுன் பிம்பராசன்
கட்டி நின்ற ஆடுகளை
அவிழ்த்தும் விட்டான்
துணிந்து!
ஆனால்
இன்றைய இன்று?
இலங்கை பிம்பராசனின்
கோட்டை!
மக்கள் எல்லோரும்
ஆடுகள்!
சித்தார்த்தன் கொள்கை
விகாரைக்குள்ளேயே!
நீளும் துயர்களைக்
கண்டும்
சித்தார்த்தன் நித்திரை

—செல்வி பிரமீளா கந்தையா—
பொகவந்தலாவை.



படிப்பகம்

padippakam

## தேசியத் தலைவர்கள்

எங்கள்
வாழ்க்கையை
தெருவிற்கு இழுத்தவர்கள்
இவர்கள்!
வாழ்க்கையை மட்டுமல்ல
தேசத்தையும்
அகதிகளாக்கிய
பெருமைக்குரியவர்கள்
இவர்கள்!

— இளமதியன்

## கேள்விகள்

வறுமையே
உன் கொடுமையின்
முடிவு எப்போது?
ஏழைப்பாட்டாளிகள்
என்றுமே
உன் சிறையில்
தஞ்சமா?
மாட மாளிகைகள்
தோற்றம் பெற உதவுபவன்
நிலமின்றி
வாடுதல் முறையோ?
இந்த அநீதிகள்
இனியும்
தொடர்கதையாகுதா?

—தஸ்லிமா. எஸ். உமர்
பங்கொள்ளாமட

## தியாகத்திருநாள்

இங்கே —
மிருகங்களை குர்பான்
செய்வதே
தியாகத் திருநாளாகிறது!
தியாகமே வாழ்க்கையாகும்
ஏழை மக்கள்
எல்லாம் பெற
யாரை 'குர்பான்' செய்வது
சரியாகும்?
நமது இழட்டு
வர்க்கப்பேத சமூகத்தை
என்பேன்

பாத்திமா ஜீனியாரஸாக், வத்தளை

## பயனற்றவைகள்

பாட்டாளியின் உழைப்பை
சுரண்டும்
பணக்கார வர்க்க அமல்கள்
பயனற்றதாகி விடும்
சுரண்டல் கொண்டு
சுயநலம் தேடும்
தர்மங்களும்
பயனற்றதாகி விடும்
பக்கத்துவீட்டு பாவைகள்
பசியால்வாட,
ஹஜ்ஜுக்கு செல்வதும்
பயனற்றதாகி விடும்

— கோவை அன்சார்
கொழும்பு

## வரட்சி மேகங்கள்

நான்
எத்தனையோ
சாதனைகளைச் சாதிக்க
முயல்கிறேன் —
இந்த மண்ணுக்காக!
வரட்சி மேகங்கள்
தேசத்தைப் போல்
என்னிடம் இருப்பதாலா
இந்த அவலம்!
வாழ்க்கையின்
விடிவுப் பூக்கள் கூட
வரட்சி மேகங்களால்
அள்ளிச் செல்லப்படுகிறதா?

— நிம்லா
மாவனல்லை



படிப்பகம்

padippakam

# மலையகக் கல்வி நிலை

## ஒரு கண்ணோட்டம்

'மலைக்குயில்' கண்டி.

1840 ம் ஆண்டளவில் தென் இந்தியாவிலிருந்து இலங்கையின் கோப்பி, தேயிலை, றப்பர் தோட்டங்களில் கூலி வேலைசெய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட கூலிச் சமூகத்தினரே இன்றைய மலையகத் தமிழ்ச் சமூகம்.

ஆங்கிலேயரினால் இறக்குமதி செய்யப்பட்ட இச்சமூகத்தினர் சிந்திக்கத்தக்க சமூகமாக மாறுவதை ஆங்கிலேயர்கள் விரும்பவில்லை. இச்சமூகத்தினர் கல்வி பெற்றால் தமது சுரண்டல்வர்க்கநலன் சிதைந்துவிடும் என்ற காரணத்துக்காகவே ஆங்கிலேயர் அறிவு பெறும் வழிகளை இவர்களுக்கு அடைத்தனர் எனலாம். இருப்பினும் ஆங்கிலேயர் தமது நலனுக்காகவேனும் ஓரளவு கல்விக் கலையை வழங்கினர். அதற்காக தோட்டங்கள் தோறும் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள பாடசாலைகளை ஆரம்பித்தனர். அதன் ஆசிரியர்களாக எட்டாம் வகுப்பு அல்லது அதற்குக் குறைந்த வகுப்பு கற்றவர்களை நியமித்தனர். இந்நியமனமும் மலையகத்தவர்களைக் கொண்டு ஈடு செய்யப்பட்டால் பாதகம் எனக் கருதிய ஆங்கிலத் தலைமைத்துவம் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து ஆசிரியர்களை நியமித்தனர். அதுவும் கிறிஸ்தவர்களை கொண்டே!

1948 ம் ஆண்டு இலங்கைக்கு ஆங்கிலேயர்களால் "சுதந்திரம்" வழங்கப்பட்டது. ஆட்சி நம்மவர்களின் கைகளுக்கு பரிமாறியது. தேசிய எழுச்சி, மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. ஆனால் எட்டடிக் காம்பராக்களில் வாழ்வைக்கழிக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ்வு சிறக்கவுமில்லை – விடிவு தோன்றவுமில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளதெனலாம்.

* மலையகத்தில் கல்வியறிவுமிக்க சமூக உணர்வுமிக்க அரசியல், தொழிற்சங்கத் தலைமை உருவாகாமை,,

* மலையக மக்களுக்கு போதிய கல்விநிலை ஏற்படுமிடத்து தமது சுரண்டல் நலன் பறிபோகும் எனக் கருதும் போலித் தலைமைகள் மலையக அறிவு வளர்ச்சியை நசுக்கியமை.

இன்று தோட்டப் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. எட்டாம் வகுப்புவரை நடைபெற்ற பல தோட்டப் பாடசாலைகளில் வகுப்புக்கள் குறைக்கப்பட்டுள்ளன. இதனால் தோட்டப்புற மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தொடரமுடியாதவர்களாக அலைக்கின்றனர். நகர்ப்புற பாடசாலைகளும் தோட்டப்புற மாணவர்களுக்கு இடவசதி கொடுக்க மறுத்துவருவதும் சுட்டிக்காட்டப் படவேண்டியதே.



படிப்பகம்

padippakam

கடந்த நான்கு வருடங்களுக்கு முன் பெருந்தோட்டத்துறை ஆசிரியர் நியமனம் எனும் போலி நாடகம் மேடையேற்றப்பட்டது. இதுவரை வழங்கப்பட்டுள்ள 2000 ஆசிரியர் நியமனங்களில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகள் 200 பேருக்காவது ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதா என்பதும் மிகப் பெரிய சந்தேகம்தான். இந்த 2000 ஆசிரியர் நியமனம் பற்றி எவரும் தட்டிக் கேட்காததால் அதனைத் தொடர்ந்து வழங்கப்படவிருந்த 1000 ஆசிரியர் நியமனத்தில் மலையகத்தவர்கள் முழுக்க, முழுக்கப் புறக்கணிக்கப்பட்டனர். இந்த சமூக அநீதிக்கெதிராக மலையக இளையவர்கள் பெரும் போராட்ட நடவடிக்கைகளில் இறங்க தள்ளப்பட்டதும் உண்மையே!

இதேவேளை மலையகத்தில் போதியளவு மலையகத் தமிழ்க் கல்வி அதிகாரிகள், அதிபர்கள் இல்லாததும் பெரும் துரதிஷ்டமே. இந்த விடயங்களை அரசின் கவனத்திற்கு சமர்ப்பிக்க மலையக அரசியல் வாதிகள் இதுவரை முன்வராதது கவலை தருவதாகவே உள்ளது.

மலையகத் தோட்டப்புற மாணவர்களது கல்வி வளர்ச்சியையும் மலையக சமூக சிந்தனை மிகுந்த அதிபர் ஆசிரியர்களையும் அழித்தொழிப்பதற்கென்றே சில அதிகாரிகள் மலையகக் கல்வித் திணைக்களங்களில் உருவாக்கப்பட்டுள்ளனர். இந்த போலிகளுக்கு மலையக அரசியல், தொழிற்சங்கத் தலைமைகளும் மறைமுகமாக உதவி வருவது மலையகத் துரோகமே.

இந்த நிலையிலேயே பலவித தடைகளுக்கு மத்தியிலும் ஒரு சில கல்விமான்களைக் கொண்டு மலையக சமூகம் ஆமைவேகத்தில் முன்னேறுகிறது. இந்த வேகம் இன்னும், இன்னும் அதிகரிக்கப்படுமானால் எதிர்கால 10 வருடங்களில் மலையகக் கல்வி நிலை திருப்தி தரக்கூடிய வளர்ச்சியை அடையலாம். இதன் மூலம் மலையக அடிமைத்துவத்தையும் அழிக்கலாம். வெறுமனே மந்திரிப் பதவிகளும் ஜே. பி. பட்டங்களுக்காகவும், வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும், தேசியப் பட்டியலில் பெயர் இடம்பெறுவதற்காகவும் ஜனாதிபதியிடமும் – அரசிடமும் இரவிரவாக பேச்சுவார்த்தை நடத்தும் எமது "பெரும்தலைவர்கள்" எமது மலையக கல்வி வளர்ச்சிக்கு ஆரோக்கியமாக எதையும் செய்யவில்லை என்பதை வரலாறு தீர்ப்பு சொல்லியே தீரும்.

மலையகத்தின் நிகழ்கால கல்விவளர்ச்சியை திட்டமிட்டு நாசப்படுத்துபவர்கள் தமக்கு அதிருப்தியானவர்களை உருவாக்கியே வருகிறார்கள். பழைய தலைமைகளால் செயல்படுத்த முடியாமல்போன மலையக கல்வி எழுச்சி புதிய தலைமைகளால் செழிப்புப் பெறும் என்ற நம்பிக்கை மலையக சிந்தனைவாதிகளிடம் உறுதியாக உள்ளதெனலாம்.



படிப்பகம்

padippakam

# வாசகர் பூமி

★ விடிவு 6ஆம் இதழை நுகர்ந்தேன்; எழுச்சி ஊட்டுவதாகவும், சுவையாகவும் இருந்தது. வாழ்த்துக்கள்.

— தர்கா நகர் செல்வி நிஸ்வா ஸலாம்

★ விடிவு சமுதாயத்தின் விடிவுகால நட்சத்திரமாக ஜொலிக்கட்டும்.

— அளுத்கம திருமதி இர்பானு ஜெப்பார்

★ விடிவு சஞ்சிகை நன்முகவே இருந்தது. அட்டைப்படம், அதன் கவிதை, சிறுகதை, கட்டுரைகள் மிக நன்று.

— ராஜவெல ந. பார்த்திபன்

★ விடிவில் இன்னும் புது விடயங்களையும் இணைத்துக்கொள்ளுங்கள் முயற்சி பாராட்டத்தக்கதே.

— ஹனுப்பிட்டி நோனு பெரேசா

★ ஏழைகளின் கஷ்டப்படும் வாழ்வை அட்டைப்படம் கவிதைகள் காட்டி நிற்கின்றன. வாழ்த்துக்கள்.

— வத்தளை ரிஸ்வானு பாருக்

★ உங்கள் இறுதி வெளியீட்டைப் பார்த்தேன். அட்டைப்படம் மிகத் தரமாக சிந்தனு உணர்வை தூண்டுவதாக அமைந்துள்ளது. மனித நேயம் மிக்க உங்கள் முயற்சி வெற்றி பெறும்.

— நிந்தவூர் சட்டத்தரணி எஸ். முத்துமீரான்

★ மலையகத்தில் முற்போக்கு கண்ணோட்டத்தில் வெளிவரும் ஒரே ஒரு இதழாக விடிவு உள்ளது. உங்கள் பயணத்தில் இன்னும் நாட்கள் கஷ்டப்பட வேண்டும். துணிவுடன் முன்னேறுங்கள்.

— மஸ்கெலியா எல். நாமதேவன்

---

## வர்க்கப் போராட்டம்

சுரண்டப்படுபவர்களுக்கும் — சுரண்டும்வாருக்கும் ஏற்படும் முரண்பாடு வர்க்கப் போராட்டம் மூலமாகவே தீர்க்கப்படும். இதன் மூலம் முதலாளித்துவத்தின் கொடுமைகள் தீர்க்கப்படும். சோஷலிச சமுதாயம் ஏற்பட்டபின் வர்க்கப் போராட்டம் புதுவடிவம் பெறும்.



படிப்பகம்

padippakam

சிறுகதை

# காரணம்?

ஆர். எம். இம்தியாஸ்
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

ஊரடங்குச் சட்டம் தீவிரமாக அமுலாகிக் கொண்டிருந்தது. நகரம் ஆரவாரமின்றி மரண அமைதியை போர்த்தியதாக காட்சியளித்தது. தெருவின் மத்தியில் ஆயுதம் தரித்த படையினர் அனுமதிப்பத்திரத்துடன் பயணிக்கும் ஒரு சில வாகனங்களை சோதித்துக் கொண்டிருந்தனர். இன்னும் ஒரு இராணுவப் பிரிவினர் வீடு வீடாக தேடுதல் நடத்தினர். இந்த மரண அமைதியின் மத்தியில் தெருவின் இடது பக்கத்தின் ஓரமாக அமைந்துள்ள குடிசை வீட்டிலிருந்து ஊடுருவி வந்த உரையாடல் காற்றோடு கலந்து கொண்டிருந்தது.

''ஏன் வாப்பா ஊரடங்குச் சட்டம் அமுலாகுது...''

''அரசுக்கு எதிராக இளைஞர்கள் போராடுறாங்களாம், அவர்களை அழிக்கவும், தேடிப்பிடிக்கவுமே இந்த ஏற்பாடு''

மகனின் கேள்விக்கு தகப்பன் பதில் சொன்னார்.

''ஏன் வாப்பா அவங்க அரசை எதிர்க்கிறாங்க...''

முன் வீட்டில் சோதனையில் ஈடுபடும் படை வீரர்களை வாசல் கதவினூடாக பயத்துடன் அவதானித்தவாறு கேட்டான்.

''வேலை இல்லாதது தான் முக்கிய காரணம்...''

தகப்பன் விடையளித்தார்.

''வேலை இல்லாப் பிரச்சினை வரக் காரணம் என்னவாப்பா...''

''இலவசக் கல்வியால் பல இலட்சம் பேருங்க பரீட்சை செய்றாங்க 10 வீதமானோரே தொழிலும் பெறுறாங்க... ஏனையவர்கள் நடுரோட்டில்தான். இதில் ஒரு பகுதி தான் விரக்தியுற்று போராடுறாங்க......''

இன்றைய இலவசக் கல்வியின் விளைவு பற்றி தகப்பன் தத்துவ ஞானி போல் பதில் சொன்னார்.

''அப்படின்னா இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடுறதும்-எதிர்காலத்தை வளமாக்க சமூக மாற்றத்தை எண்ணுவது நியாயம் தானே வாப்பா... இந்த அரசும் ஏழைகளின் அரசல்லதானே.. வீட்டின் ஜன்னலினூடாக தெரியும் தென்னை மரங்களினூடாக வெளிச்சத்தை ரசித்தவாறிருந்த தகப்பன் அதிர்ச்சி அடைந்து விட்டார்.

''மவனே மெதுவாய் பேசு.''

தகப்பன் அவன் வாயை அடைத்தான்.



படிப்பகம்

padippakam

# இன்றைய இலங்கை கல்வி நிலை

## சிறு குறிப்புகள்

● ப. வி. ஸ்ரீரங்கன்

இன்றைய இலங்கைப் பாடத்திட்ட கல்வி அமைப்பானது முதலாளித்துவ அரசைக் கட்டிக்காக்கும் அமைப்பாக உள்ளது. பாடசாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்வது வெறும் பாடநூல்களை கற்பதற்கு மட்டுமன்று. இன்றைய சமூகவிதிகள், ஒழுங்குமுறைகள் யாவும் அங்கு கற்பித்து விடுகிறார்கள். பின்பு உற்பத்தியில் ஈடுபட்டு சட்டதிட்ட ஒழுங்குகளை கடைப்பிடித்தது உழைப்பதற்கும் முதலாளித்துவம் செழித்து வளரவும் நியதிகளையும், கட்டுப்பாடுகளையும் கற்பித்து வருகிறார்கள்.

பாடசாலைகளிலே அவர்கள் வைத்துள்ள ஒழுங்குமுறைகளை மீறி நடந்தாலோ, குறும்பு செய்தாலோ, ஒழுங்கீனமாக நேரம் தவறிச் சென்றாலோ கடும் தண்டனைகள் உண்டு. பிரம்பால் அடிப்பது, வாங்குமேல் ஏற்றி புத்தகங்களைச் சுமந்த வண்ணம் நிற்க வைப்பது, பாடசாலை வகுப்புக்கள் முடிந்ததும் தங்கவைத்து வேலை செய்விப்பது போன்ற தண்டனைகளை வழங்கி சின்னஞ்சிறு உள்ளத்திலேயே அடிமை மனோபாவத்தை உருவாக்கி தொழிலாளர்களை உற்பத்தி செய்து முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்கு உகந்த வகையில் மனச்சிகிச்சையளிப்பது, பின்பு கூலிகளாக மாறும்நிலைக்கு மக்கள் உருப்பெறுவார்கள்.

பாடசாலை, கல்லூரி ஒழுங்குமுறைகளும், தண்டனைகளும் இன்றைய சமூகத்தோடு ஒட்டி ஒழுக்கங்கற்பிக்கும் ஆரம்ப அறிவுறுத்தல்கள் பின்னர் உழைப்பில் ஈடுபடும்போது குழப்பினால் அல்லது தவறாக நடந்தால், கூலிக்காக நியாய ஆர்ப்பாட்டம் செய்தால் பொலிஸ், இராணுவம், சிறைச்சாலைகள், நீதிமன்றங்கள் போன்றன முதலாளித்துவ அமைப்பைக் கட்டிக்காக்க செயல்படும். ஆக இவை யாவும் இன்றைய உற்பத்தி சமூகமாக நடைபெற வேண்டிய விஞ்ஞான, தொழில் நுட்ப, செயலாற்றும்திறன் உடலமைப்பு மட்டுமல்ல முதலாளிகள் எதிர்பார்க்கும் சட்ட ஒழுங்குமுறைகளுக்கும் கட்டுப்படும் மனோபாவத்தையும் பள்ளிகளில் கற்பிக்கப்படுவது என்பதை யாரும் மறக்க வேண்டாம்.



படிப்பகம்

padippakam

கல்வியில் போட்டி வைத்து, போட்டி மனங்களை உருவாக்கி மாணவர்களை கூறுபோட்டு உழைப்பாளிகளாகவும் முதலாளித்துவ அரசயந்திரத்தை கட்டிகாக்கும் காவலராகவும் இரு வர்க்கங்களை பாடசாலைகள் உருவாக்குகின்றன. உற்பத்தி முறை இன்று நிலவுவது போன்றே தொடர்ந்து இயங்குவதற் கேற்றவாறு மேற்படி விடயங்களை முதலாளித்துவ கல்வி அமைப்பு செயல்படுத்துகின்றது. இன்றைய இக்கல்வி அமைப்பானது அடக்குபவர்களுக்கும், வேண்டிய கல்வி முறைகளை பாடசாலை-கல்லூரி என்கிற இரு இடங்களில் புகட்டுகிறது. இக்கல்வி முறையை சிறந்தது என எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளும்படி முதலாளித்துவம் நியாயப்படுத்தி விடுகிறது. எல்லா பெற்றோரும் இதே கல்வி முறையை தம் பிள்ளைகள் கற்க அனுப்பி வைக்கிறார்கள்.

பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் யாவும் அரசாங்கமே நடத்துகிறது. தனியார் ஆதிக்கத்திலுள்ள கல்வி நிலையங்களை எல்லாம் அரசு கண்காணித்து வருகிறது. இங்கெல்லாம் பரீட்சைகள் அரசின் ஆணைப்படியே நடக்கின்றன. பரீட்சையில் பெறும் சான்றிதழ்களை வைத்தே பதவிகள் முதலாளிகளாலும் அரசாலும் வழங்கப்படுகின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; முதலாளித்துவ யந்திரத்தை காப்பாற்றும் கல்வி முறைகளையே கற்பிக்கப்படுகிறது. மாறாக இயற்கை விஞ்ஞானத்திற்கு காட்டும் அக்கறையை சமூக விஞ்ஞானத்தில், மார்க்சிச சித்தாந்தம் புகட்டப்படுவதில்லை. பொருளாதாரத்தை அடிப்படையாக அமைந்த வரலாறே புகட்டப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிப் போராட்டங்கள், அவற்றால் ஏற்பட்டு வரும் சமூக அமைப்பு மாற்றங்கள் பற்றியெல்லாம் போதிக்கப்படுவதில்லை. இவையாவும் போதிக்கப்படுமாயின் இன்றைய தனி உடைமை பொருளாதார அடிமட்ட அமைப்பு மக்களால் சுக்குநூறாக்கப்படுத்தப்படும் என்கிற அச்சமே.

## வரலாறு

வரலாறு என்பது நிலப்பிரபுக்கள், மன்னர்கள், மத குருக்களின் வாழ்க்கையும் தீவிரச் செயல்களுமல்ல; வெவ்வேறு உற்பத்தி முறைகளின் மூலம் மனித இனம் இயற்கையின் மேல் ஆதிக்கம் செலுத்தியதை விவரிப்பதே வரலாறு. மார்க்ஸ்

(உற்பத்தி முறைகள் 5: புராதன சமூகம், அடிமை, நிலவுடைமை, முதலாளித்துவம், சோஷலிசம்.)



படிப்பகம்

padippakam

# மலையக அரசியலும் தடுமாறும் தலைமைகளும்

— ரோதைமுனி —

சீ. வீ. சொல்கின்றார்: மலையக மக்களை பல அட்டைகள் உறிஞ்சி வாழ்கின்றன. கங்காணி அட்டைகள் - கடைக்கார அட்டைகள் Ect. Ect. இதில் இப்போது தொழிற்சங்க அட்டைகளையும் சேர்த்து கொள்வோம்.

மலையக தலைமைத்துவம் பற்றிய ஆய்வை தொடக்கும் எவரும் தொழிற்சங்கங்களை மறந்து விடக்கூடாது, இலங்கை இந்திய காங்கிரஸ் மலையக மக்களுக்கு முதலாவதாக தலைமை ஏற்பதாக சொல்லிக் கொண்டது.

1948 ஆம் ஆண்டு ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன் மூலம் பாராளுமன்றம் சென்றனர். (சில நன்மைகள் இருந்தாலும்) பொதுவாகவே இலங்கை இந்திய காங்கிரஸ் இந்தியாவின் நலவுரிமைகளையே பாதுகாத்தது.

தோட்டத் தொழிலாளர்களை தேசிய நீரோட்டத்தில் இணையவிடாது தடுத்த மிக பெரும் பணியை இ. இ. தொழிலாளர் காங்கிரஸ் செய்தது.

இதன் விளைவாகவே பின்னுல் தேசபிதா இலகுவாக குடியுரிமை சட்டத்தினை பாராளுமன்றத்துக்கு கொண்டு வரவும், அதில் வெற்றி பெறவும் வழிகோலப்பட்டது.

இதன் பின் இ. தொ. கா. தொழிற்சங்கம் வளரத் தொடங்கியது. இது மலையக மக்களின் சம்பள உயர்வு, வீடு வசதி போன்றவற்றை பெற்றுத்தர போராடுவதாக சொல்லிக் கொண்டது,

சம்பள உயர்வு போர்க்களங்களில் கம்பனிக்கு தாளம் போட்டும். அரசுக்கு ஒத்து ஊதியும் தனது நலன்களை பாதுகாத்தது. (பிரசித்தி பெற்ற 17.50 போராட்டத்தில் 10 சதத்தை வாங்கித்தந்ததை வரலாறு மறக்கவில்லை)

இன வெறி, சாதி வெறி, மத வெறி என்பன இ. தொ. காவில் புகுந்ததால், இ. தொ. கா. பல பிரிவுகளாகப் பிய்ந்து போனது.

இத்தகைய சிறிய பிரிவுகள் பல்கிப் பெருகின. சந்தா திரட்டவே இவர்களை தாரக மந்திரமாக்கியதால் இவைகள் தமக்குள் சண்டையிட்டன.



படிப்பகம்

padippakam

இதனுல் பலம் பெற்ற இ. தொ. காவை இவர்களால் வெல்ல முடியவில்லை. மிக அண்மைக் காலம் வரை இ. தொ. கா. தனது ''மாபெரும் தலைமைத்துவ பண்பினை'' மார்தட்டிக் கொண்டது.

மலையக இடதுசாரிகளும் மலையக தலைமைக் காய்ச்சல் கொண்டிருந்தனர். மார்க்ஸீஸ லெனின் கொள்கைகளை தியரியில் கரைத்து குடித்த இவர்கள் தலைமைத்துவ மனப்பால் குடித்ததில் வியப்பில்லை. (இந்த இடதுசாரிகளை மலையக இளையவர்கள் நம்பமறுத்தாலும் அதிசயம் இல்லை)

இதற்கிடையே சில ''பட்டதாரி இளைஞர்களும்'' தலைமைத்துவம் தர முயன்றனர். வெளிப்பிரதேசங்களில் மனைவியரைத் தேடிக்கொண்டு காணி பூமிகளை வேற்று மண்ணில் வைத்துவிட்ட இவர்கள் மேடை ஸ்டைல் அரசியல் பேச முற்பட்டனர்.

இவ்வாறு மலையக தலைமைத்துவம் நிரந்தரமின்றி உதைபந்தாக உருண்டபோது இ. தொ. கா. தேர்தலை சந்திக்க தொடங்கியது.

அவசர அவசரமாக வாக்குரிமை சட்டம் போன்றவற்றை நிறைவேற்றி சாஎர ஒப்பனை செய்து இ. தொ. கா. தப்ப முயன்றது.

ஆனுல் இ. தொ. காவுடன் மலையக மக்கள் முன்னணி வாக்கு கேட்டதால் வாக்குகள் சிதைய இ. தொ. காதோல்வி கண்டது. பரபரப்பாகப் பேசப்படும் ம. ம. மு. அரசியலில் தேர்தலை சந்திக்க முயன்றமையும், வாடகை சின்னம், வாடகை கொள்கையை வாங்கி வந்தமையும் தாங்கள் தலைமைக்கு லாயக்கு அற்றவர்கள் என்பதை தெளிவு படுத்தியது. (இ. தொ. கா. போல் ம. ம. மு. கடையே நடத்து பவர்கள் மறக்கக் கூடாது).

புனருத்தாரணம் செய்வதாக பொய் கூறிய இ. தொ. கா. கந்தப்பளை ஸ்கூலில் மாணவர்களின் கல்வியை தாக்கி சேதப்படுத்தியதும், மத்திய மாகாணசபையில் மலையகத் தொழிலாளர்களை கருத்திற் கொள்ளாத ஆளுநர் உரையை (எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது) இரு கரம் கூப்பி ஆதரித்தமையும் தலைமைத்துவப் பண்பில் இ. தொ. கா. இனி தலைகாட்ட முடியாது என்பது வெளிப்படையாயிற்று.

மலையக மக்கள் - இலங்கை - உலக - தொழிலாளர் வர்க்கத்தின் ஓர் பிரிவு என்பதனை உணர்வதோடு - வர்க்க அடிப்படையிலேயே இவர்கள் பிரச்சினைகள் தீர்வுகாண வர்க்க அடிப்படையிலான தலைமைத்துவமே தேவை.

இதைவிடுத்து வேரினை விட்டு விட்டு இலைகளுக்கு மருத்துவம் செய்யும் எந்த முறையாலும், இவர்கள் நோய் தீராது. தலைமைத்துவம் செழிக்காது.



படிப்பகம்

padippakam

# முஸ்லிம் மக்களும் சமவுடமைப் போராட்டமும் சில தெளிவுகளும்!

— பாத்திமா மஹிதா —

முஸ்லிம் மக்கள் மத்தியில் சோஷலிஸ்டுகள் நடாத்தி வரும் சம தர்மப் பொருளாதரர சமூக அமைப்புக்கான போராட்டம் பற்றி அதிருப்திகரமான நிலைப்பாடு தொடர்ந்து நிலை கொண்டே வந்துள்ளன. இதற்கு பல காரணங்களை முன்வைக்க முடியுமாளுலும் முஸ்லிம் தொழிலாளர் விவசாயிகள் மத்தியில் சோசலிசப் போராட்டம் பற்றி சரியான தெளிவுகள் முன்வைக்கப் படாததும், முஸ்லிம் எழுத்தாளர்கள் சோசலிஸ்டுகள் தொடர்பாக எழுதிவரும் உண்மைக்கு புறபான பிரச்சாரமும் இதில் மிக முக்கியத்துவம் வகிக்கிறது எனலாம.

சோசலிஸப் போராட்டம் என்ருல் என்ன என்பதை நாம் சுருக்கமாகப் பார்ப்போம்.

சோசலிஸப் பொருளாதாரம் என்ருல் முதலாளி வர்க்கத்தின் சுரண்டல், அடக்குமுறைக்கு எதிராக தொழிலாளர் வர்க்கம் நடாத்தி வெற்றிபெறும் பொருளாதார அமைப்பேயாகும். இந்த அமைப்பில் ஏழைகள், பணக்காரன், தொழிலாளி, முதலாளி என்ற மனித வேறுபாடுகள் படிப்படியாக ஒழிக்கப்படும். இதன் மூலம் கொலை, கொள்ளை, பலாத்காரம் போன்ற இன்றைய அமைப்பின் மோசமான நோய்கள் தோன்ற வழியே ஏற்படாது. மனிதர்கள் சமாதானமாக, சகோதரமாக, சமத்துவமாக, வாழும் கௌரவ நிலை ஏற்படும். மக்கள் தத்தமது இறைவணக்க முறைகளை ஒழுங்காக நிறைவேற்றி மறுமைக்குரிய வாழ்வை ஒழுங்குபடுத்தவும் வழி ஏற்படும்.



படிப்பகம்

padippakam

இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பில் தேசத்துக்குள்ளும், குடும்பத்துக்குள்ளும் பிரச்சினைகள் இருப்பதால் முஸ்லிம் மக்கள் தமது தொழுகையைக் கூட ஒழுங்காக நிறைவேற்ற முடியாது உள்ளதை நம்மால் காண முடிகிறது. இது அல்லாஹ்வின் கோபத்தை எமக்கு ஏற்படுத்தவும் வழிவகுக்குமல்லவா?

ஆனால் சமதர்ம சமூக அமைப்பில் முதலாளித்துவ அமைப்பின் பிரச்சினைகளில் முக்கால் பகுதி ஒழிக்கப்படுவதால் தேசத்தில், குடும்பத்தில் சமாதானம், சாந்தி ஏற்படவழி ஏற்படுமல்லவா? அதன் மூலம் முஸ்லிம் மக்கள் தமது வணக்க முறைகளை ஒழுங்கு படுத்தி மறுமை வெற்றியைப் பெறவும் வழி ஏற்படுமல்லவா? இத்தகைய நலன் நமக்கு ஏற்படுவதில் நம்மில் யாராவது விரும்பாது இருப்பார்களா? இது இஸ்லாமிய விரோத அமைப்பென்று எவ்வாறு கொள்ளலாம்? இஸ்லாம் உயர்ந்த குடும்ப, சமூக வாழ்வை நேசிக்கிறது. அது சோசலிச சமூக அமைப்பாலே தான் சாத்தியம்.

இதற்கு இனவாதரீதியில் தொடரும் போராட்டம் கெடுதி தரும். நாம் இதை நிராகரித்து சோசலிச சமூக அமைப்புக்கான போராட்டத்திற்கு ஒத்துழைப்பதும் இஸ்லாமிய வாழ்வை உறுதிப்படுத்த உதவுமல்லவா? இனியும் நாம் இப்போராட்டத்தில் ஈடுபடுபவர்களை "அரைக்கண்ணால்" பார்க்க வேண்டுமா?

**மனசு திறந்து சொல்லுங்களேன்!**

---

**சுரண்டல்**

முதலாளிகளின்
சொகுசு வாழ்வுக்காக
சுரண்டப்படுகிறது—
தொழிலாளர் உழைப்பு,
ஆனால்—
தொழிலாளர்களின்
சோகங்களில்
சேர்கிறார்களேயில்லை
முதலாளிவர்க்கம்!

இந்த—
கொடுமையினை
எதிர்க்க
ஒன்றுபடுங்கள்!
நீதியான
அமைப்புக்காக
நாம்
போராடுவோம்.

—ரஸாக். எம். நகீப்—
வத்தளை

---



படிப்பகம்

padippakam

# பெண் நிலைவாதமும் மதக்கோட்பாடுகளும்

— சாந்தி சச்சிதானந்தம்

தற்போதைய பெண்கள் பிரச்சினைகள் பற்றிய எந்த விவாதமும் வெவ்வேறு மதக்கோட்பாடுகளை யொட்டிய சர்ச்சைகளைக் கிளப்புவது தவிர்க்க முடியாத தொன்றாகும். இன்னும் கூட சமுதாயங்களில் பெண்களின் வாழ்நிலை அவர்களுடைய சமயங்கள் நிர்ணயித்த வரையறைகளுக்குள்ளேயே பெருமளவு ஒடுங்கியிருக்கின்றது தான் இதற்குக் காரணமாகும். ஆயினும் சமய நம்பிக்கைகள் அவரவர்க்குரியதாகவும், கலாசார ரீதியாக மனிதர்களின் குணபாங்கினில் உள்வாங்கப் பட்ட சிந்தனைகளாகவும் இருப்பதனால் ஒரு பொதுமட்டத்தில்கூட உணர்ச்சி வசப் படாது பாரபட்சமின்றி இவற்றை ஆராய முடிவதில்லை. பெண்கள் மத்தியில் பிளவுகளையும் இது ஏற்படுத்துகின்றது. இஸ்லாத்தைவிட இந்துமதம் பெண்களுக்கு அதிக சுதந்திரத்தைத் தருகின்றது என மார்தட்டிக் கொள்வர் இந்துப் பெண்கள்; இந்துப் பெண்களை விடதாம் தான் புத்தபிரான் வகுத்தபடியே சகலத்துறைகளிலும் ஆண்களுக்கு சரிசமனாக இருக்கின்றோம் என இறுமாப்படைவர் பௌத்த பெண்கள்; இவர்களெல்லாரையும் விட இயேசு போதித்த மதமே பெண்கள் மீது ஒருவித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை என்பர் கிறிஸ்துவப் பெண்கள்; இஸ்லாம் மற்ற மதங்களை விட பெண்களை அதிகம் போற்றுவதனாலேயே இவ்வளவு பாதுகாப்பினை விதிக்கின்றது என்று முணுமுணுப்பர் முஸ்லிம் பெண்கள். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமது சமயங்களில் பெண்களைப் பற்றிச் சிலாகித்துக் கூறப்பட்டவற்றைத் தேடிப் பிடித்துக் கொண்டிருக்க, அடிமைத்துவத்திலிருந்து மீள வழிகோலும் பெண்களுக்கு மதக் கோட்பாடுகளைப் பற்றிய கண்ணோட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்னும் முக்கிய கருத்து எங்கோ விடுபட்டுப் போயிருக்கும்.

சமயம் என்பது ஒரு மக்கள் தமக்கிடையேயும் தமக்கும் இப்பிரபஞ்சத்திற்குமிடையேயும் உள்ள உறவினைச் சீர்படுத்தும் மனப்பூர்வமான கொள்கைகளின் கூட்டு என வரைவிலக்கணம் தருகின்றனர் சமூகவியலாளர்கள். இந்தக் கொள்கைகளும் மனித வரலாற்றில் சதா சர்வகாலமும் ஒரேமாதிரி இருந்ததில்லை மானுடர்களின் சமூக



படிப்பகம்

padippakam

பரிணாம வளர்ச்சியின் (Social evolution) வெவ்வேறு நிலைகளுடனும் தொடர்புடைத்தாக திட்டமாக வரையறுக்கக் கூடியதாகவே இவையும் மாற்றமடைந்து வந்திருக்கின்றன. ஆதியில் வாழ்ந்த மனிதர்கள் கடவுள் என்னும் கருப்பொருளினை உணராதவர்கள். ஏனெனில் இயற்கையிலிருந்து தம்மை வேறுபடுத்தி நோக்கும் திறனற்றிருந்தனர். கூட்டுவாழ்க்கை தமக்களித்த சக்தியினையே அவர்கள் நிதர்சனமாகக் கண்டனர்.

இவ்வாறாக, மனிதன் மனிதனாக வாழ உதவிய அந்த இனந்தெரியாத மூதாதையர் ஆவிகளுக்கு தமது வந்தனங்களைத் தெரிவித்தனர். இதைத்தவிர உலகத்தின் சம்பவங்கள் மீதும் ஏதும் கட்டுப்பாடுகள் கொண்டவையாய் இந்த ஆவிகள் செயற்படவில்லை இம் மக்களின் சடங்குகளும் எங்கோ என்றோ இருந்த கனவு யுகத்தில் மனிதன் உருவான வரலாற்றினை நடித்துக் காட்டும் நாடகங்களாகவே இருந்தன. இந்த ஆரம்பமே பின்னைய காலகட்டங்களில் தனித்தியங்கும் பெருவிருட்சங்களான சமய ஸ்தாபனங்களுக்கு வழிகோலிற்று. இந்த வளர்ச்சியில் தான் எவ்வளவு மாற்றங்கள், ஒன்றுக்கொன்று முரணான எத்தனை தத்துவங்கள், உலகெங்கணும் நாம் கற்பனை செய்யக்கூடிய சகல வகையான நம்பிக்கைகளும் வேறு வேறு காலகட்டங்களில் துளிர்விட்டுத் தழைத்தன. கடவுள் உண்டு என்றும் கோரப்பட்டது. இல்லை ஆத்மா ஒன்றே நித்தியம் என்றும் விவாதிக்கப்பட்டது. பல தெய்வங்கள் உண்டு எனவும் நம்பப்பட்டது. ஒன்றே கடவுள் என்றும் நிறுவப்பட்டது. தெய்வத்திற்கு உருவமுண்டு என்றார்கள், இதற்கு நேர்மாறாக அருவவழிபாடுதான் நடத்த வேண்டும் என்ற கொள்கையையும் கடுமையாக அமுல்படுத்தினார்கள். எந்தக் கொள்கைக்கும் எதிரான கொள்கையினை என்றோ எங்கோ ஒரு மக்கள் பரிபூரணமாக நம்பினார்கள் தெய்வங்கள் கூட பலவித உருவங்களில் காட்சி தந்தன. மொங்கோலியரின் தெய்வங்கள் சாய்ந்த சிற்றுக்கண்களை உடையவையாக இருந்தன. எத்தியோப்பியரின் கடவுள் சப்பை மூக்கும் சுருட்டை முடித்தலையும் கொண்டவராக இருந்தார், கிரேக்கக் கடவுள்கள் நீலக்கண்களும் பொன்னிற தலைமுடியும் கொண்டனவாய் இருந்தன. உலகத்து மதங்களை ஒரு கட்டுக்கோப்பாகப் படிக்க விழைகின்றவர்களுக்கு இதெல்லாம் பெரும் குழப்பத்தினை விளைவிக்கக் கூடும். சார்பற்ற உண்மை என்று ஒன்றில்லையா என வினவலாம். எவ்வாறு நீக்ரோ மக்களின் கடவுள் நீக்ரோ உருவையொத்தவராகவும் இந்தியக் கடவுள் இந்தியரை ஒத்தவராகவும் இருக்கின்றார்களோ அதேபோல் எந்த மக்களின் தத்துவங்களும் கூட்டாக அவர்களுடைய அனுபவங்களினதும் அபிலாஷைகளினதும் பிரதிபலிப்புகளாகவே இருக்கும்.



படிப்பகம்

padippakam

மனித சமுதாயம் வர்க்கங்களாகக் கூறுபோடப்பட்ட காலகட்டத்திற்றான் சமய தத்துவங்களில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன எனலாம். பெண்களைப் பொறுத்தவரையிலும் கூட தாம் ஆணாதிக்கத்திற்குட்படத் தொடங்கிய காலமும் இதுதான். இதுவரை காலமும் குழாம் அங்கத்தவர்களுக்கெல்லாம் பொதுவாக இருந்த சமயங்கள் இதன்பின் சமூகத்தின் அதிகாரபீடங்களில் அமர்ந்தவர்களின் ஏகபோக உரிமையாகியது. மககளின் வாழ்வில் வழிகாட்டும் பெரும் சக்தியாக இருந்த மதங்களை ஆளும் குழுவினர் தமதாக்க முயற்சித்ததில் ஆச்சரியமில்லைதான். அந்த மதங்களும் அவ்வாறே மக்களின் அபிலாஷைகளை முழுதாகப் பிரதிபலிப்பதை விட்டு அந்த ஆளும் வர்க்கத்தின் தன்மைகளின் பிரதிபலிப்பாக மாறின. அவர்கள் கையில் அதிகாரத்தினைப் பிரயோகித்து அடக்கியாள உதவும் சிறந்த கருவியாகவும் செயற்பட்டது. இந்த மதங்கள் முன்புபோல் குழு ஒற்றுமையை வேண்டுவனவாகவும் கூட்டு வாழ்க்கையின் சிறப்புக்களையும் ஓம்புவனவாகவும் இருக்கவில்லை. உலகில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளையும் அதன் பயனாக மலிந்த துன்பங்களையும் பாவ புண்ணியம், இவ்வுலகம் மறுவுலகம். இப்பிறப்பு மறுபிறப்பு என்னும் ரீதியில் நியாயப்படுத்த ஆரம்பித்தன. இதுவரை காலமும் வணங்கப்பட்டு வந்த அன்னைத் தெய்வங்கள் ஒன்றில் வழக்கில்லாது ஒழிந்தன அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட ஆண் தெய்வங்களுக்கு மனைவியராக இரண்டாம் பட்சமாய்த் தள்ளப்பட்டன. தெய்வங்களும் உயர்வர்க்கத்தினரின் பிம்பங்களில்தான் உருவகிக்கப்பட்டன. உதாரணத்திற்கு (1) கடவுள்களொன்றும் கோவணம் உடுத்து கலப்பை தூக்க வில்லை; மாறாக (1) இந்து சமயத்தில் பிரபலமாக வழங்கிய வழிபாடுகளின் பட்டாபரணங்கள் பூண்டு அங்கங்கே உட்கார்ந்து சயனித்திருக்கக் காணப்பட்டன. பெண் தெய்வங்களும் ஆண் தெய்வங்களுக்குப் பணிவிடை செய்து கொண்டு கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன. ஒவ்வொரு சமயத்தினையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த வர்க்கங்களில் பெண்கள் என்ன அந்திஸ்தினை வகித்தாரோ அதே அந்தஸ்து அவ்வவ் சமயக் கோட்பாடுகளில் பெண்களுக்கு அளிக்கப்பட்டது, இதன் காரணமாகவே ஒவ்வோர் சமயக் கொள்கைகளிலும் பெண்களுக்கு ஒவ்வோர் சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம் இதிலிருந்து பெறக்கூடிய முடிபு என்னவெனில், எந்தவொரு வரலாற்றுக் காலச் சமுதாயத்திலும் பெண்கள் சம உரிமை பெற்றிருக்கவில்லை என்பது உண்மையானால் ஒரு மதத்திலும் பெண்களுக்கு சம உரிமை அளிக்கப்படவில்லை என்பதேயாகும்.



படிப்பகம்

padippakam

# VIDIVU

130, D. S. SENANAYAKE VEEDIYA,
KANDY.

பிரதம ஆசிரியர்:-

நிதானிதாசன்
(ஆர். எம். இம்தியாஸ்)

ஆசிரியர் குழு:

கண்டி எம். ராமச்சந்திரன்
பாமியா பாரூக்
எம். இஸட். ஷாஜஹான்

முகவரி:

130, டி. எஸ். எஸ். வீதி,
கண்டி.

தொலைபேசி:
08 – 23196.

எமது மனிதநேய பணிக்கான பங்காளர்களாக உங்களையும் நாம் அழைக்கிறோம். விடிவு இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டுமென ஆசைப்படுபவர்களை சந்தாதாரராக இணையுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சந்தா விபரம்:

| | |
|---|---|
| ஆறு மாதச் சந்தா | 30 00 |
| வருடச் சந்தா | 60 00 |
| (தபால் செலவு உட்பட) | |

சந்தா அனுப்ப விரும்புவோரும், தனிப்பிரதிகள் கொள்வனவு செய்ய விரும்புவோரும் பெறுபவராக.

R. M. Imtiyaz எனவும் தபாலகமாக Kandy என்வும் இடவும்.

## ம. க. இ. பே. கிளைச் செய்திகள்!

ம. க. இ. பே. கொழும்புக் கிளையின் 12-வது கவி மாலைப் பொழுதும்/ இலக்கியக் கருத்தரங்கும 28. 05. 89 பி. ப. 3. 30க்கு கொட் / முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கவிஞர் எம். பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். திருவாளர்கள்: செ. கணேசலிங்கன், எம். சீ. எம். எம். காசீம் ஆகியோர்கள் சிறப்புரையாற்றினர்.

* ம. க. இ. பே. கமபஹா மாவட்டக் கிளை ஹீணுப்பிட்டி முஸ்லிம் சங்கத்துக்கு 500 ரூபா பெறுமதியான புத்தகங்களை அன்பளிப்புச் செய்தது. கம்பஹாக் கிளைச் செயலாளர் ரசாக் எம். நகீப் புத்தகக் கட்டுக்களை சங்க பொருளாளர் ஜனுப் முன்ஞஹ் அவர்களுக்கு கையளித்தார்.

* ம. க. இ. பே. மத்திய செயற்குழு சார்பாக களனிப் பகுதி வெள்ள அகதிகளுக்கு உடுதுணி, உணவு வகைகளை அமைப்புச் செயலாளர் நிதானிதாசன் உத்தியோகப் பூர்வமாக களனிப்பகுதி பொறுப்பாளரிடம் கையளித்தார்.

* தேசிய மாணவர் முன்னணி அண்மையில் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதைக் குறித்து கண்டன அறிக்கையை வெளியிட்டது.

படிப்பகம்

padippakam

# இரு வேறு எஃகுப் பூக்கள்

(புதுக் கவிதைத் தொகுதி)

- குற்றுயிராய்க் கிடக்கும் பாலஸ்தீன விடுதலைப் போராளியை எவ்வாறு ஓர் இஸ்ரேலியன் காப்பாற்ற முடியும்.
- கண்ணதாசனின் ஆபாசக் கவிதைகள்.
- கணிகைப் பெண்களை கல்கொண்டு அடித்துக் கொல்வது நியாயமா?

ஆகிய விடயங்களை தாங்கி வெளிவந்துள்ளது.

புதுக்கவிதை எழுதுபவர்களுக்கு மிக பயன் தரக் கூடிய புத்தகம்.




புதுக்கவிதை வாசிப்பதில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு புதிய அனுபவத்தை அளிக்கின்றது.

இலக்கிய ஆர்வலர்களின் ஆவலை தீர்ப்பதாக உள்ளது. மூன்று வண்ணங்களிலான அழகிய சித்திரத்துடனான அட்டைப் படத்தைக் கொண்டுள்ளது.

20 குறுகிய கவிதைகளையும் 20 நெடிய கவிதைகளையும் தாங்கி 40 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இது எம். பாலகிருஷ்ணனின் 2வது கவிதைத் தொகுதி

விலை. 10/- ரூபா

மாணவர்களுக்கு 20% கழிவு அளிக்கப்படும்

தொடர்புகளுக்கு:-

**Branch Secretary**

Peoples Art Literary Assembly
33 'B' Sir Dhamma Mawatha
Colombo-10.

---

*130 DSS வீதி கண்டியில் வசிக்கும் நிதானிதாசனுகிய என்னுல் கொழும்பு - 12 குமரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

படிப்பகம்